# *பணி நிறைவு வாழ்த்து!*

**இரா.கண்ணன், இ.வ.ப.** நாள்: **31-05-2023**
உதவி ஆணையர்



பணியிலே சேர்ந்து நாங்கள்
ஓரிரு ஆண்டுதன்னை உவகையாய்
கழிக்கும் போழ்தில்,
இளையராய் ஒரு நூறுபேர்
இணைந்தனர் எங்கள் துறையில்!

மலர்ந்த முகமும் இணைந்த கைகளும்,
கல்லூரிதன்னை நினைவு படுத்த,
விரலது பேசி வித்தை செய்வதாய்,
கணிணியில் தகவல் உள்ளீடு செய்ய,
ஒரே அறையில் ஒன்பது பெயராய்,
பணியில் நிறைந்து காலம் கழிக்க,

அமைச்சுப் பணியில் தன்னை இணைத்து,
பயணிக்கச் சிலரும் மனதைக் கொள்ள,
அப்படியாக நிறைந்தவர் தன்னில் எங்கள்
**கண்ணன்** என்னும் தம்பியும் உண்டு!



அடுத்த நிலையில் உயர்வு கொண்டு,
பயணிக்கும்போது, இணைந்தோம் இருவரும்!
களப்பணியும் ஆய்வுப் பணியுமாய் கொண்டு,
நகரும் போழ்தில் ஐயங்கள் ஆலோசனைகள்,
எனவாய் ஒருவருக்கொருவர் உறுதுணையாகி,
பணியில் சிறந்து புகழும் கொண்டோம்!

நினைவுகள் யாவும் மனத்தில் நிறைந்து,
நெகிழ்வாய் மகிழ்வை அணையச் செய்யும்!
அன்பால் நிறைந்த **கண்ணன்** தனக்கு
இன்று **பணியில் நிறைவு** அதுவும் மகிழ்வாய்,

**உதவி ஆணையர்** என்னும் நிலையில் இருந்து!
துள்ளியே மனம் உவகையால் நிறைந்து,
தொடுக்கும் வாழ்த்து மனமது மகிழ்ந்து!
தொல்லையாம் நோய்கள் தளர்ந்து, இன்புற்று,
வல்லமை மனதில் நிறைந்து மகிழ்வுடன்
இல்லாள் பிள்ளை பெயரப் பிள்ளைகள் என,
வல்லவன் இறைவன் அருளால் நெடிது வாழ வாழ்த்தும்!



சென்னை-73
29-05-2023

அன்பன்,
**கு.ப. அசோகன்,**